நிலையக்குரல்

MAR 2001

மதுரீதி

அமரர்

சின்னையா அப்புத்துரை

அவர்களின்

நினைவு ஏடு

24-02-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையக் குரல்

சுழிபுரம் கிராமத்தலைமைக்காரன்

(விதானையார்) பதவி வகித்து ஓய்வு பெற்றவரும்

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற

குறள் வழி வாழ்ந்து

25-01-2001 அன்று அமரத்துவம் அடைந்த

சின்னையா அப்புத்துரை

அவர்களின்

நினைவு எடு

64

நிலையக்குரல்
வழக்கம்பரை
சுழிபுரம்.
24-02-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

சின்னையா அப்புத்துரை

அவர்கள்

தோற்றம்
07.05.1910

மறைவு
25.01.2001

கந்தரநுபூதி

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுளைவாயில்

சுழிபுரம், அமரர் சி. அப்புத்துரை விதானையாரது சேவையை கௌரவித்து ''நிலையக்குரல்'' சிறப்பிதழ் ஒன்றை நாம் வெளியிட ஏற்பாடு செய்து பலரிடம் செய்திகள், வாழ்த்துக்கள், கவிதைகள் எடுத்து ஒரு தொகுதியை யாழ்ப்பாணம் பாரதி பதிப்பக முதல் வரிடம் கொடுத்திருந்தோம்.

இந்த நிகழ்வு 1995 ம் ஆண்டு பிற்பகுதியில் ஏற்பட்ட இடப் பெயர்வால் நாம் தொகுத்து வழங்கிய விடயம் அச்சகத்தில் இருந்து தவறிவிட்டதாக அறிந்தோம். காலம் கனிவாக இல்லாததால் நாம் எண்ணிய கருமம் நிறைவு பெறமுடியவில்லை.

''நிலையக்குரல்'' சிறப்பிதழை எப்படியும் வெளியிட வேண்டிய ஏற்பாடுகளை உடன் கவனிக்குமாறு ஆசிரியர்கள் திரு. இந்திர ராசா, திரு. மு. தம்பியையா ஆகியோர் என்னைக்காணும் வேளை எல்லாம் கூறுவது உண்டு.

நாம் விதானையாரின் நூற்றாண்டு விழாவையொட்டி மலர் வெளியிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். விதானையார் உயிரோடு வாழும் காலத்தில் வெளியிட முடியாமல் போய்விட்டது.

பலர் சமய விளக்கம் கொண்ட கட்டுரைகளையும் எழுதித்தர முன்வந்தனர்.

வரும் ஆண்டு விதானையார் பிறந்த தினத்தன்று இவ் வெளியீட்டை வெளியிட்டு பெருமையுற இருந்தோம்.

நாம் ஒன்றை எண்ண காலன் விதானையார் உயிரை கவர்ந்து விட்டான்.

நிறைவான வாழ்வு வாழ்ந்து தொண்டுகள் பல புரிந்த அமரரது புகழ் சிலவற்றையாவது தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் இச்சிறு வெளியீட்டை வெளியிட்டு ஆறுதல் பெறுகின்றோம்.

வழக்கம்பரை,
சுழிபுரம்.

க. வாமதேவன்
நிலையக்குரல் சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரைக் காத்த உத்தமர்

மநுநீதி வல்ல முதலி பரம்பரையில் தோன்றிப் புகழ் பரப்பிய பண்பாளர் சின்னையா அப்புத்துரை அமரராகிவிட்டார் என்பதை எம்மால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

தொண்ணூற்றிரண்டு அகவைகள் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து மறைந்துவிட்ட இப்பெரியாரை யார்தான் மறக்கமுடியும்?

பறாளாய் முருகன் தருமகர்த்தா சபை முன்னாள் தலைவராக இருந்து அவராற்றிய பெரும்பணியினை நன்றியறிதலுடன் நினைவு கூரக்கடப்பாடுடையவர்கள் நாம். சைவநீதியின்படி வாழ்ந்த சமயி, சான்றோன்.

வாழையடி வாழையென வந்த கிராமத் தலைவர் பரம்பரையில் வந்தவர் இவர்.

இதனால் தனது கடமையைச் சரிவரச் செய்ய இவர் குடிப்பிறப்பு உதவியது. மதிப்பிற்குரிய மகான்.

இவரது கொடைகள் வள்ளன்மை மிக்கது. கோவில் திருப்பணிக் காக அள்ளிக் கொடுத்தவர். கல்விக்காக இவரது குடும்பம் வரையாது வழங்கியுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் விளையாட்டுத்திடல் விஸ்தரிக்கப்பட, தன் சொந்தநிலத்தை அன்பளிப்பாகக் கொடுத்தவர் இப்பெரியவர். இக்கல்லூரியின் நீர்தாங்கி அமைக்க கணிசமான ஒரு தொகைப் பணம் நல்கியவர்.

தனிப்பட்ட முறையில் இவரும் இவரது குடும்பமும் சுழிபுரம் வாழ் மக்களுக்கு ஆற்றியுள்ள சேவைகள் அநந்தம். அன்பும் பணிவும் உள்ள அருங்கொடையாளர். அறநெஞ்சினர்.

இவரது சமயத்தொண்டோ ஈடிணையற்றது. மானா முதலி மடத்தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர். அதைத் திறம்பட நிருவகித்தவரும் அவரே. எமது பறாளாய் முருகன் கோவில் கும்பாபிஷேகத்தின் போது நிருவாகசபைச் செயலராக இருந்து யாவரும் புகழும் வண்ணம் பணிபுரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் கோவில் மணவாளக் கோலத்திருவீழாவை கனகச்சித மாகத் தவறாது செய்துமுடித்தார்.

பறாளாய் முருகன் சித்திரத்தேர் செய்யப்படுகையில் நிருவாகத் தில் இருந்து செயற்பட்டவர் சின்னையா அப்புத்துரை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. கடமையிற் பிறழாதவர்.

இவரது சமூகத்தொண்டோ மிகப் பெரிது. திருவடி நிலைக் கடலரிப்பைத் தடுத்து நிறுத்த எமது கிராம அபிவிருத்திச் சபை முனைந்தபோது அதற்கு ஊன்றுகோலாக நின்று உழைத்து, அவ் வேலை முடிவுறத் தம்மை முற்றாக அர்ப்பணித்த சமூகத்தொண்டன் இவர். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தை முழுமூச்சாகக் கொண்ட பெரியார் இவர். இக்குடும்பம் 'இட்டார் பெரியோர்' வகையைச் சேர்ந்தது.

இவ்வாறு சமூக - சமயத் தொண்டு புரிந்து எமக்கு வழிகாட்டிய இப்பெரியார் புகழுடம்பெய்தி விட்டமை எமது சமுதாயத்துக்குப் பேரிழப்பாகும். இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

இவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதே எம்மனை வரதும் தலையாய கடனாகும். அதுவே இவர் ஆத்மாசாந்திக்கான சிறந்த வழியுமாகும்.

சுழிபுரம்

வே. நாகராசா
தலைவர்
பறாளாய் முருகன் தருமகர்த்தா சபை

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

— திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிறைவுடன் வாழ்ந்த மூத்த பழம்

சுழிபுரம் முன்னாள் கிராமத்தலைவர் திரு. சி. அப்புத்துரை அவர்கள் வாழ்வை, வாழ்வின் வரைவிலக்கணத்திற்கு அமைய வாழ்ந்து பூர்த்தி செய்தவர். இளமையில் கிராமத் தலைவராக இருந்தபோது மிகத் துணிச்சலுடன் செயலாற்றியவர்.

அவர் எனது தந்தையின் நெருங்கிய நண்பர். அதனால் அவர் என்னில் மிக அக்கறையாக இருந்தார்.

விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவன். அதனால் கல்லூரிக்கு பல விதங்களில் உதவி புரிந்தார்.

வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தின் காப்பாளராக மல்லாகம் நீதி மன்றினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் கோவில் சொத்துக்களை கண்ணும் கருத்துமாக பாது காத்து, பின் பரிபாலன சபை ஏற்பட்ட போது அதற்கு போசகரா யிருந்து சபையை வழிநடத்தி நின்றார்.

கோவிலில் உள்ள ஒவ்வொரு பொருளையும் நினைவில் வைத் திருப்பார். அது யாரால் கொடுக்கப்பட்டது, ஏன் கொடுக்கப்பட்டது? என்ற விபரம் அவருக்குத் தெரியும். இது அவரிடம் இயற்கையாக அமைந்த சிறப்பம்சமாகும்.

கோவிற் பொருள்கள் சிதையாமல் சீரழியாமல் காத்த பெருமை அவருக்குண்டு.

அதற்கு பிரதிஉபகாரமாக அம்பாளின் கடாட்சம் அவருக்கு நிரம்ப உண்டு. அதற்குச் சாட்சி, நல்ல நிலையில் வாழும் அவரின் பிள்ளைகள்.

பிற்காலத்தில், நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட பின், சாய் மனைக் கதிரையில் இருந்து செய்த நற்சிந்தனை, ஜபம் போன்றவை தவமாக மாறி பிள்ளைகளை நல்ல நிலைக்கு உயர்த்திபது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் நல்ல சிந்தனைக்கு சிறந்த பலன் உண்டு. அது பலித்தே தீரும். நல்ல சிந்தனை வருவதற்கு ஞானம் வேண்டும். ஞானம் பெற பூர்வ புண்ணியம் வேண்டும். இவை தொடர் நிகழ் வுகள்.

90 ஆண்டு வாழ்ந்து நிறைந்த அனுபவம் பெற்ற ஒரு முது பெரும் பழம், அதை நாம் இழந்து விட்டோம்.

எல்லோரும் தருமம் செய்ய முடியாது. தருமம் செய்யும் மனம் வேண்டும். அது பண்பு பெற்ற உள்ளத்திலேயே உதிக்கும். உள் ளத்தைப் பண்படுத்த பல சாதனைகள் செய்ய வேண்டும். நல்ல உள்ளம் அவரிடம் இருந்தது. அதனால் பல தரும நிகழ்வுகளைச் செய்தார்.

அவர் செய்த பலதரப்பட்ட தர்மச் செயல்கள் என்றும் மக்கள் மனதில் பசுமையாகயிருந்து இன்னும் பல தர்மச் செயல்களில் மக்களை ஊக்குவிக்கும்.

நாடு ஒரு நல்ல பிரஜையை இழந்து விட்டது. குடும்பம் ஒரு நல்ல தலைவனை இழந்து விட்டது, கிராமம் ஒரு நல்ல சமூகசேவை யாளனை இழந்து விட்டது, நான் ஒரு நல்ல வழிகாட்டியை இழந்து விட்டேன்.

அவரின் குடும்ப அங்கத்தவர் சாந்தி பெற வேண்டும் என்றும் அவரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து என்றும் அகலா இன்பம் பெற வேண்டும் என்றும் எங்கள் வழக்கம்பரை முத்துமாரியை வேண்டு கின்றேன்.

ஓம் சாந்தி

செ. பத்மநாதன்
ஓய்வுபெற்ற அதிபர்

தொல்புரம்,
சுழிபுரம்.

நில்லாத னவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

—திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் நிறைந்த நினைவு அலைகள்

சோழர்புரம் பெற்றெடுத்த
சோதிவடிவானவனே,
ஆண்டவனின் அருள் நிறைந்த
அப்புத்துரை ஐயா,

நீவிர் நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்தீர்
நிறைந்த தோற்றம், பரந்த உள்ளம்,
சிறந்த சேவை செய்தீர்
இவையே நின் பெரும் ஆக்கம்

இன்று ஐவர் ஆற்றும் கிராமசேவையை
அன்று அருமையாகத்தனித்து ஆற்றி நீர்
அடங்கா அட்டகாசம் செய்யும் அன்றைய
பனிப்புலத்து துட்டரை அன்பு காட்டி

அடக்கி நீர் அரசகருமம் அலுவல்களுக்கு
ஆக்கபூர்வ அறிக்கை அளித்தீர்
அதனால் அனேகர் அரசசேவையில்
அமர்ந்தனர் மகிழ்ந்தனர்.

அன்றும் என்றும் எடுத்த கருமம்
எல்லாம் இனிதே நிறைவேற்றி நீர்
அடுத்தோரை அரவணைத்தீர்
ஆக்கம் பல கண்டீர்

ஐயா, ஆற்றிய சேவைகள் அனந்தம்
இறைவன் திருப்பணிகள், இளைஞர் முன்னேற்றம்
எத்தனை பொதுப்பணிகள் எல்லாமே ஈடேற்றம்
இத்தனையும் தொடர இனிமேல்

எவர் என்று ஏங்குகிறோம்.
அத்தனையும் நிறைவேற்ற
அவர்தந்த எச்சங்கள்
இறை அருளால் அத்தனையும்

ஆக்கம்தர, அளித்துள்ளார்
ஆண்டவா! ஐயாவின் ஆத்துமா
நின்பாதம் அலங்கரிக்க, அவர்தம்
தொண்டுகள் தொடர, அன்பான அவர்
மக்களை ஆசீர்வதிப்பீராக!

"ஓம் நமசிவாய"

பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

ஐயாவின் அன்புக்குரிய
கு. வி. கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறிக் காவலர்

பங்கயத்து அயனும் மாலும் அறியா நீதி எது? அது மநுநீதி. அந்த நீதி சுழிபுரம் வாழ் அப்புத்துரை அவர்களின் உள்ளத்திலே துளிர் விட்டிருந்தது.

மநு என்பவர் யார்? நீதி என்றால் என்ன? என்று சிந்தித்தவர் இது வரை யாருளர்? நாவலர் அந்நீதியைப் போற்றினார்; வாழ்விலும் காட்டி நின்றார். அந்த நீதி தழைத்திட உழைத்தவரும் அவரே.

அந்த நீதியை விளைவித்திட நிலத்தை எங்கே தேடினார். பிள்ளைகளின் உள்ளத்திலே அதை விதைக்க எண்ணினார். பசுமரத்தாணிபோல் அவர்களது உள்ளத்திலே அது ஆழப்பதிந்து விடும் என்று நினைத்தார். தாம் பிள்ளைகளின் கல்விக்காய் எழுதிய பாலபோதினி என்ற புத்தகத்திலே மநுநீதி கண்ட சோழன் என்ற பாடத்தைப் புகுத்தினார்.

அப்பாடத்தைக் கற்ற மாணவர்களில் எத்தனைபேர் அந்த நீதியைப்பற்றிச் சிந்தித்தனர்; எண்ணிப் பார்த்தனர். அப்படிச் சிந்தித்தவர் எண்ணிப்பார்த்தவர் பலர் இருக்கலாம்! அதற்கு என்ன சான்றுளது? அறிந்தவரை அப்புத்துரை ஒருவர்தான் சான்றாய் விளங்குகிறார்.

இளவயதிலே அந்த நீதி என்றவித்து அவர் உள்ளத்தில் வேர் பாய்ச்சித் துளிர் விட்டிருந்தது. அதன் வெளிப்பாடே அவர் தமது வழித்தோன்றல்களுக்கு இட்ட பெயராய் அமைந்து விட்டது.

இரு மநுக்களைப் பற்றி வரலாறு சொல்லுகிறது. ஒருவர் வட நாட்டைச் சேர்ந்தவர். பெரிய மகான். அவர் நூல் ஒன்று எழுதினார். அதற்கு மநுநீதி கண்ட சாஸ்திரம் என்று பெயர். வருணாச்சிரம தர்மத்தை அது எடுத்தோதுகிறது.

மனித குலத்தை அந்தணர், அரசர், வைசிகர், சூத்திரர் என்று நான்கு குலத்தவராக்கி ஒவ்வொரு குலத்தவரும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளை, வாழ்க்கை முறைகளை சிறப்பாய் எடுத்தோதுகின்றது. அதுவே வேதம் தழுவிய வேதநெறியாம். அது அறிவு நெறி. "வேதநெறி தழைத்தோங்க" என்ற பெரியபுராண அடிகள் இதையே எடுத்துச்சொல்லுகிறது.

இதற்கு வேறாய கருத்தை வள்ளுவனாரின் தமிழ்வேதம் எடுத்தோதுகின்றது. உலகிற்குப் பொது நீதி வகுத்தவர் அவர். மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்திற்கல்ல மன்னுயிர்க்கு எல்லாம் நீதி ஒன்றே என்று உறைப்பாகச் சொன்னவர் அவர். அந்த நெறி நின்று முட்டாது முறை செய்தவன் அடுத்த மநுவாம் மநுநீதி கண்ட சோழன்.

மன்னர்க்கென வகுத்த வீதியிலே, அவன் மகன் தேரூர்ந்து செல்கையிலே, யாருமறியா வேளை பயமறியாப் பசுக்கன்று தேர்க் கால் இடை புகுந்து இறந்துபட, அது கண்டு தாய்ப்பசு கண்நீர் உகுத்திக் கதறியழ, அச்செய்தி கேட்ட மன்னவன் நீதியைத்தேடி னான். தன் மகனைத்தேரால் ஊர்ந்து நீதி எது என்று காட்டினான்.

''தண்ணளி வெண்குடை வேந்தன் செயல் கண்டு தரியாது''

அந்தளவில் அந்த நீதி அங்கே தரித்து இருக்கவில்லை. மன்ன வனைத்தேடி மண்ணுலகம் வந்துவிட்டது. திருமாலும் பன்றி யாய்ச் சென்றுணராய் அத்திருவடி, அந்தத்தேடிய பாதம் மன்ன வனைத்தேடி வந்து விட்டதே!

அந்த நீதி எது?

''பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று''

உண்மையை ஒருவன் கடைப்பிடிப்பானேயாகில் அவன் பிற அறங்களைச் செய்யாமல் இருப்பதுவே நன்று என்று வள்ளுவனார் அதற்கு எல்லை போடுவது ஏன்? ''வீழ் நாள்படாமை நன்று ஆற்றின்'' என்று அறிவுரை கூறிய வள்ளுவனார் அறம்பிற செய் யாமை நன்று என்று வரைமுறை செய்வது ஏன்?

உண்மையே வடிவினன் இறைவன். நீதியும் அதுவே, இதற்கு மேல் ஒன்றும் இல்லை என்பதை அறிவுறுத்தவே அறம்பல செய் யாமை செய்யாமை நன்று என்று அவர் கூறி நின்றார் போலும்.

இதுவே சைவநெறி. அதுவே அன்பு நெறி; அருள் நெறியாம்.

''வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'' என்று பெரிய புராண அடிகள் குரல் எழுப்பி நிற்கின்றதே.

''சைவ நெறி காத்தவர் அப்புத்துரை அவர்கள். அவர் ஒரு செம்மையாளர்.

சோழியர்புரம். அது சுழிபுரம் அப்புரத்தில் வாழ்ந்த அப்புத்துரை உள்ளத்திலே துளிர் விட்ட அந்த நீதி - மநுநீதி தழைத்திட வேண் டாவோ! ஊரெல்லாம் உலகெலாம் அது நின்று உலவ வேண்டாவோ! சிந்தியுங்கள்.

வணக்கம்

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

மயில்வாகனம் கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமை நிறைந்த தலைவர்

அமரத்துவம் அடைந்த திருவாளர் சின்னையா - அப்புத்துரை அவர்களை நினைக்கும் பொழுது நெஞ்சம் நெக்குருகுகின்றது. நல்ல அழகானதும் புருஷத்துவம் நிறைந்ததுமான தோற்றப் பொலிவுடையவர். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் புறநானூற்றுப் புலவனின் கூற்றை நிஜமாக்கிய மேன்மைக்குரிய அதிமனிதர் அவர். நான் சிறுபிள்ளையாக இருக்கும் காலம் தொடக்கம் அவரை நன்கறிவேன். என் தந்தையாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். எங்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர். எனது வளர்ச்சி கண்டு மகிழ்ச்சியுற்றவர். சுழிபுரம் முழுவதற்கும் விதானையாராக விளங்கியதோடு அயற்கிராமத்திலுள்ளவர்களைப் பற்றியும் நன்கறிந்தவர்.

வகுப்பாசிரியர் ஒருவருக்குத் தனது வகுப்பிலுள்ள மாணவர் ஒவ்வொருவரினதும் குடும்பப் பின்னணி பற்றிய அறிவு இருந்தாற்றான் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். அதே போல, கிராம விதானையார் ஒருவருக்கு அந்தக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடிமக்களதும் விபரம் தெரியவேண்டும். கிராம சேவையாளர்களாகவும், கிராம அலுவலர்களாகவும் விளங்குபவர்களைவிட ஒருபடி மேலே இருந்து, குடிமக்கள் அனைவரையும் அவர்களது மரபு ஒழுக்கங்களையும், குணாதிசயம், பண்பு என்பவைகளையும் அறிந்து தரம் பிரித்து வைத்திருந்தவர் எங்கள் விதானையார். கண்டவுடன் முகமலர்ந்து, ஆசனமளித்து அன்புததும்பக்கதைத்து அவர் என்னை வரவேற்கும் பொழுது நான் எனது கிட்டிய உறவினர் ஒருவருடன் கதைப்பதுபோன்ற மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அடைவதுண்டு

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே,
நலமிக்க நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே'

என்ற தமிழ்மந்திரத்தின் உண்மைத்தத்துவத்தை அமரர் அவர்களைக் காணும் பொழுதும், அவருடன் உரையாடும் பொழுதும் உணர்வதுண்டு.

'உரு உட்காகும்' என்பது தொல்காப்பியச் சூத்திரத் தொடர். விதானையாருடைய கெம்பீரமான ஆளுமையுடைய உருவம், அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்துக்கு இறைவனாற் கொடுக்கப்பட்ட வரப்பிரசாத மென்றே கூறவேண்டும். இளமையிலும் சரி, பிரம்பினொடு உலா வரும் பொழுதும்சரி, மூன்றுசில்லுச் சைக்கிள் வண்டியிற்காணும் பொழுதும் சரி அவர் தோற்றத்திலும் தொனியிலும் அதிக வேறுபாட் டைக் காணமுடியவில்லை.

கிராமத்தைப்பரிபாலித்ததோடு கோவில், மடங்கள், பொதுஸ்தா பனங்கள் என்பவற்றையும் நன்கு பரிபாலித்தவர் அவர். பறாளை சிவசுப்பிரமணியப் பெருமானுக்குப் புதிய சித்திரத்தேர் அமைப்பதில் முழுமூச்சாக நின்றுழைத்தவர். தேரின் முடியிலிருக்கும் கலசத்தைத் தன்சிரசிலே தாங்கி ஏறுபோற்பீடுநடைபோட்டு வந்தாரே அந்த இனிய காட்சி என்றும் என்மனசை விட்டகலாது பசுமையாய் உள்ளது. தமக்கும், தமது மனைவிமக்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும், கிராமத் தவர்க்கும், அறிந்தவர் தெரிந்தவர்களுக்கும் தமது வாழ்நாளில் நன்மையே செய்திருக்கின்றார். தொண்ணூற்றொரு ஆண்டுகள் இப்பூவுலகிற் செல்வத்தோடும், இறையுணர்வுடனும், பெருமையுட னும் வாழ அமரர் புண்ணியம் செய்துள்ளார். நல்லதொரு இல்லக் கிழத்தியையும் அருமருந்தன்ன மக்கட் செல்வங்களையும் பெற்ற சிறப்புக்குரியவர். ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை யும் தெய்வமாவான்'' என்ற வள்ளுவனாரின் கூற்றுப் பிரகாரம் விதானையார் வானுறையும் தெய்வமாகிப் பிறவாத பேரின்பவாழ் வைப் பெற்றுவிட்டார்.

அந்தக்காலத்தில் இருமொழி அறிவுமுடைய விதானையாரின் பேச்சும் எழுத்தும் கிராமமக்களுக்குப் பெரும்பயன் அளித்து வந்தன. அவரின் சிபார்சுக்கடிதம் ஒன்றினாற் பெரும்பயன் பெற்றவள் யான். 'நன்றிமறப்பது நன்றன்று' அந்தப் புண்ணிய ஆத்மா பறாளை ஈசுரவிநாயகர், சிவசுப்பிரமணியசுவாமி பாதாரவிந்தங்களில் அடைக் கலமுறப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

சுழிபுரம்.

ண்டிதை பொன். பாக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் பிறை கண்ட அமரர்

சுழிபுரத்தில் கௌரவமான குடும்பத்தில் திரு. சின்னையா அவர்களின் தவப்புதல்வனாகத் திரு. சின்னையா அப்புத்துரை அவர்கள் 1910 ம் ஆண்டு தோன்றினார். இவர் தமிழ் ஆங்கிலம், ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றார். சுழிபுரம் ஐக்ய சங்க சைவ வித்தியாசாலையில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றுங் கால் தமது தந்தையார் ஆற்றி வந்த கிராமத்தலைவர் பணியை மேற்கொண்டார். இவர் காலத்தில் உபஉணவுப் பயிர்ச்செய்கைக் காக கிணறுகள் பல உருவாக்கப்பட்டன. விவசாயத்துறை மேம் பட்டது.

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் கும்பாபிசேகத்தின் போது இவரது உழைப்பு ஈடிணையற்றது. ஆலயம் தர்மகர்த்தா சபையின்கீழ் கொண்டுவர அயராது உழைத்து வெற்றியும் கண்டு அதன் உபதலைவராகப்பணியாற்றினார். வழக்கம்பரை முத்துமாரி யம்மன் ஆலயமும் தர்மகர்த்தா சபையின் கீழ்க்கொண்டுவர ஆவன செய்தார். சுழிபுரம் கம்பளை அம்பாள் ஆலயம் புற்றினால் புரையோடிப்போயிருந்த சமயத்தில் ஆலய உரிமைக்காரரோடும் அயலவர்களோடும் சேர்ந்து உழைத்து ஆலயத்தைப் புதிதாக தீர்மானித்து கும்பாபிசேகம் செய்வித்து இற்றைவரை அதன் தலைவராகப் பெரும்பணியாற்றினார். இங்கு நித்திய நைமித்திய பூசைகள் செவ்வனே நடைபெறுகின்றன. அலங்கார திருவிழாக்கள், பூரத்திருவிழாக்கள், நவராத்திரி, திருவெம்பாவை, அபிராமிப்பட்டர் விழா, சிவராத்திரிவிழாக்கள் எனப்பல விழாக்கள் நடைபெறு கின்றன. இவர் தலைவராய் இருந்த காலம் இவ்வாலயத்தின் பொற்காலம் எனலாம்.

சுழிபுரம் ஐக்கிய நாணய சங்கத்தில் அளப்பரிய பணிகள் ஆற்றினார். (சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது) விவசாயிகளுக்கு கடன் வழங்கியும் அறுவடைக்காலத்தில் மீளப்பெற்றும் விவசாயி களை ஊக்குவித்து ஐக்கியப்படுத்தினார். கண்டியில் நடைபெற்ற கூட்டுறவு இயக்க மகாநாட்டில் ஐக்கிய மேற்பார்வைச் சபையின் சார்பாக சென்று யாழ்மக்களின் கூட்டுறவு மனப்பான்மையை வெளிக்கொணர்வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றிதழ்

சுழிபுரம் மத்திய ஐக்கிய நாணய சங்கத்தைச் சேர்ந்த திரு. சின்னையா அப்புத்துரை இலங்கை மன்றக் கல்லூரியால் நடாத்தப்பட்ட ''கூட்டுறவும் கிராமிய கொடுகடன்களும்'' கருத்தரங்கில் / பயிற்சி வகுப்பில் பங்குபற்றியமை இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஒப்பம்
துணை இயக்குநர்

ஒப்பம்
இயக்குநர்

திகதி 17-09-1982.

இலங்கை மன்றக் கல்லூரி
100, சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

அவர்களது செயற்பாட்டினால் அவரது பிள்ளைகளும் நன்றாக வாழ்கின்றனர். திரைகடலோடித் திரவியம் தேடி தாமும் வாழ்ந்து ஏனைய பொதுப்பணிகளுக்கும் உதவி வருகின்றனர்.

எமது சனசமூக நிலையத்தில் நீண்டகாலமாக காப்பாளராக இருந்து எமக்கு இடர்பாடு வந்த போதெல்லாம் உதவி, எம்மை ஊக்கப்படுத்தி, நிலமும் கட்டடமும் மன்றத்தின் உரிமையாகப்பெற ஆணிவேராகத்திகழ்ந்தார். விதானையாரின் பிரிவு ஈடுசெய்யமுடியாதது. ஊர்ப்பற்றோடு வாழ்ந்த சமூக விரும்பியை இழந்து நாம் வருந்துவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சைவப்புலவர் சு. சுந்தரம்பிள்ளை B. O. L.
காப்பாளர்

நாவலர் சனசமூக நிலையம்
சுழிபுரம்.

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

— திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரத்தின் ஒளி விளக்கு

''தோன்றிற் புகழொடு தோற்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று''

என்று பேசுகிறது வள்ளுவம். இதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் அமரர் சின்னையா அப்புத்துரை.

இவர் செய்த சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணியின் மேன்மைக்கு இவரது இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் கூட்டமும் இவரின் சேவையை நினைவு கூர்ந்து வெளியிட்ட அஞ்சலிப் பிரசுரங்களுமே சான்றாகும்.

ஒரு சைவசமய ஆசார சீலராக அதே நேரம் எல்லா மக்களையும், பதங்களையும் சமமாக மதிக்கும் சமதர்மவாதியாகவும் விளங்கியவர். மனித நேயம் மிக்க மாமனிதராகத் திகழ்ந்தவர். மக்கள் சேவையே மகேசன் சேவையாக எண்ணி தொண்டாற்றியவர்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.''

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குறளுக்கேற்ப அவருடைய பிள்ளைகள் மிக நன்னிலையில் மற்றவர்களால் போற்றப் படும் நிலையில் உளர்.

எல்லாச் சிறப்புக்களையும் தன் நீண்ட வாழ்நாளில் பெற்றவராக அமரர் இறுதி வரையும் வாழ்ந்தவர்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பர் வாக்குக்கு அமைய பணி செய்து வாழ்ந்தவர்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

எனவே இப்பெரியாரும் இறைவனின் திருப்பாதத்தை அடைந்திருப்பார். இவருடைய உயர்ந்த குறிக்கோள்களை தன்னலமற்ற சேவையை மற்றோரை மதிக்கும் பண்பை நாம் எல்லோரும் பின்பற்றுவோமாக.

ஓம்சாந்தி! சாந்தி!

சி. சிவராஜா
கல்விப்பணிப்பாளர்

வடமராட்சி கல்விக்கோட்டம்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்வடைய ஆழுமையின் சின்னம்

இறைபக்தியும் இனிய சுபாவமுமுடைய மனிதனாக விளங்கிய அமரர் சி. அப்புத்துரை அவர்கள் அறிவாற்றலிலும் சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சுழிபுரம் கிராமத்தினுடைய எல்லை அதன் வரலாறு அங்கு வாழ் மக்களின் பண்புகளை ஆதியோடந்தமாகச் சொல்லக் கூடிய தகைமையுடையவர்.

அவருடைய ஞாபகசக்தி வியக்கத்தக்கது.

தன் சிறிய பராயம் முதல் அவர் இறக்கும் வரையும் தன் வாழ்விலும், தன் ஊரில் உள்ளவர்களின் வாழ்விலும் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க செயல்களை பசுமரத்தாணி அறைந்தது போன்று ஞாபகப்படுத்துவார்.

ஊரில் உள்ள பிள்ளைகள் கல்வியினால் உலகில் உயர வேண்டும் என்ற நோக்கில் ஊக்கப்படுத்துவார்.

சைவப்பண்பாடு ஊரிற் பொலிய வேண்டுமென்று ஆசைப்படுவார். திருநாவுக்கரசுநாயனார் ''குறிக்கோளிலாது கெட்டேன் நானே'' என்று மனம் வருந்துகின்றார்.

மனிதனானவன் தன் வாழ்வில் ஒரு இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டு உழைக்க வேண்டுமென்பது நாயனாரின் விருப்பம். அமரர் அப்புத்துரை தான் சமூகத்தில் கல்வியிலும் பண்பாட்டிலும் உயர்ந்து நிற்க வேண்டுமென்ற உயரிய நோக்கை இலக்காகக் கொண்டு அயராது உழைத்து இலட்சியத்தை அடைந்தது மாத்திரமன்றி பிள்ளைகளையும் இலட்சியத்திற்கான வழிவகைகளைக் காணும் வண்ணம் ஆற்றுப்படுத்தியவர். அன்னாரின் தாழாத முயற்சி எமக்கெல்லாம் திசையறி கருவியாகும்.

''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை''

என்பது வள்ளுவர் வாய்மொழி. வாழ்வில் அறிவு என்பது பிறர் துன்பத்தைப் போக்க உதவ வேண்டும். அந்த வகையில் இளமை தொடக்கம் இறக்கும் வரையும் பிறர் துன்பம் நீக்க தாளாது உழைத்த சான்றோன் அமரர் அப்புத்துரை.

அன்னார் என்றும் சிவனடியில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி நா. செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர்:
இந்துநாகரிகம்
தலைவர், நுண்கலை

யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுடையார்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதுதான் மனித நேயத்தின் சிறப்பாகும் என்பதை வாழ்ந்து காட்டலின் மூலம் உணர்த்தியவர் அமரர். சி. அப்புத்துரை அவர்கள் ஆவர்.

தெய்வப்பணியும், கல்விப்பணியும் நல்லணிகளாகக் கொண்டவர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவரான அவர் தனது வாழ்நாளின் கணிசமான பகுதியை அதன் அபிவிருத்திக்காக செலவழித்தமை குறிப்பிடத்தக்கதாகும். கல்லூரியின் தேவைகளை அவ்வப்போது கேட்டறிந்து அவற்றை நிறைவு செய்வதில் பேரார்வம் காட்டினார். ஆயிரத்திற்குமதிகமான மாணவர்களின் தாகசாந்திக்காக 1998ம் ஆண்டு ரூபா 65000/- செலவில் குழாய் நீர் விநியோகத்தைத் தனது நேரடி மேற்பார்வை மூலம் சொந்தப் பணத்தில் சீர்செய்துதவிய சீமானாவர்.

வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான் என்பதை உணர்ந்தும், ஆங்கிலக்கல்வியின் தேவை அறிந்தும் கல்லூரி நூலகத்திற்கு ஒரு தொகுதி ஆங்கில நூல்களைத் தனது சிரேஷ்ட புத்திரன் பொறியியலாளர் திரு. A. சதானந்தவேல் மூலம் வழங்கி உதவினார்.

புத்தாயிரம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பத்தின் தேவையறிந்து தனது கிராமத்து மாணவச் செல்வங்களும் உலகத்தோடு ஒத்தோட வேண்டுமென்ற நல்நோக்கத்தினால் கணனி ஒன்றினையும் தனது புதல்வர்கள் மூலம் பெற்றுத்தர வழியமைத்துள்ளார்.

விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்காக தனது 5½ பரப்பு காணியினையும் தந்துதவுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார். சென்ற மாதம் தனது மகன் திரு. A. N. மனுநீதி மூலம் நீர் தாங்கி சேதமடைந்திருந்தமையை அறிந்து அதனைத் திருத்துவதற்கான செலவாகிய ரூபா 67000/- மதிப்புள்ள தொகையினைப் பொறுப்பேற்றிருந்தார்.

தனது இறுதிக் காலத்திலும் கூட கல்லூரி ஸ்தாபகர் அமரர். கனகரத்தினம் செல்லப்பா அவர்களின் சிலையொன்றினைக் கல்லூரி வளாகத்தினுள் நிறுவ வேண்டுமென்ற பேரார்வம் கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர், ஸ்தாபகர் குடும்பத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான உதவிகள் கிடைப்பதற்கு வழியமைத்துத் தந்தார். ஆனால் அம்முயற்சி நிறைவுறுவதைக்காண அவர் இல்லையே என் றெண்ணும் போது மனம் கலங்குகின்றது. ஆயினும் அவர் இப்பூவுல கில் வாழ்ந்ததால் பல்லாயிரக்கணக்கான மனிதர்களை வாழவைத் துள்ளார். பிறவியின் பயனைப் பெற்றுள்ளார் என உணர்ந்து ஆறுதலடைகின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எமது கல்லூரியில் வீற்றி ருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

திருமதி. அ. வேலுப்பிள்ளை
அதிபர்.

விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

தேவை அறிந்து உதவிய பெரியார்

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அளப்பெரும் சேவைகளைச் செய்து வந்ததுடன் மேலும் மேலும் தேவை அறிந்து பல்வகையான உதவிகளை வழங்கி வந்த பெரியார் சுழிபுரம் விதானையாராக விளங்கிய அமரர் சி. அப்புத்துரை அவர்கள் 27-01-2001 வியாழன் அமர வாழ்வு எய்திய செய்தி அறிந்தோம்.

இப் பெரியாரின் மறைவு எமக்கு ஓர் பேர் இழப்பாகும்.

அன்னாரது பிரிவு தாங்காது துயர் உறும் பிள்ளைகளுக்கு ஆறு தல் கூறி அமரர் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள் கின்றோம்.

மறைந்த பெரியார் அமரர் திரு. சி. அப்புத்துரை ஐயா இறை வனின் பாதாரவிந்தத்தை பற்றி வாழவும் - ஆத்மா சாந்திக்காகவும் நாம் யாவரும் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

வி/ விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான மனிதர்

சுழிபுரம் அப்புத்துரை விதானையார் நிறைவான வாழ்வு பெற்ற முழுமையான மனிதர், மாமனிதர் என்றால் மிகையாகாது.

அப்புத்துரை விதானையார் கண்ணியம் மிக்க ஒரு உதாரண வாழ்வு வாழ்ந்திருந்தார்.

தன்னுடைய கடமை காரணமாக ஒவ்வொருவரையும் அறியும் வாய்ப்பையும், ஆற்றலையும் பெற்றிருந்தார். அப்படி அவர் அறிந்த தால் ஒவ்வொருவரிடமும் இருந்த குறைபாடுகளைத் தன்வாழ்வில் இடம் பெறாவண்ணம் வாழ்ந்து ''தோன்றில் புகழொடு தோன்றுக'' என்ற திருக்குறளுக்கு உதாரண புருஷரானார்.

இவர் சிலகாலம் சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை யில் ஆசிரியராகக் கடமையாற்றியது பலருக்குத் தெரியாத விடய மாக இருக்கும். அத்துடன் முன்னைய பாடசாலை முகாமைத்துவ நிர்வாகத்தினருக்கு உதவியாக இருந்தும் பாடசாலையை வளர்த் தெடுத்தார்.

இவர் இக் கடமைகளைச் செவ்வனே நிறை வேற்றியிருப்பார் என்பதை அவருடைய இயல்புகள் எடுத்துக் காட்டுகின்றன. அவர் ஒருவருடைய உளப்பாங்கை உணர்ந்து அவரவர்களுடன் பழகும் முறையில் இருந்து இதனை அறியலாம்.

கிராமத் தலைமைக்காரன் என்ற சிறப்பிற்கு ஏற்ப இவர் பொதுக் காரியங்களை அணுகுதல், ஆதாரித்தல், பங்குபற்றல், ஊக்கப்படுத்தல் முதலியவற்றில் தலைமைபெற்று விளங்கினார்.

கோவில், சனசமூக நிலையம், பாடசாலை போன்ற பொது அமைப்புக்களுடன் அன்றும், இன்றும் ஈடுபாட்டுடன் அணுகி பொருளுதவி, ஆலோசனை வழங்கிவருவது யாவரும் அறிந்த விடயம்.

எங்கள் பாடசாலையில் தற்போதைய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய ஒரு சிறுவர் பூங்காவை நிறுவ பொருளுதவி புரிந்தார்.

இதனால் எங்கள் பிள்ளைகள் விளையாட்டு மூலம் கல்வியை மகிழ்ச்சியுடன் பெறுகின்றனர். மேலும் பறாளாய் முருகன் கோவில் மகாகும்பாபிஷேகத்தின் போது இவர் வாத்தியார் ஐயாவுடன் சேர்ந்து செயற்பட்டதை கோவிலுடன் தொடர்புடையவர்கள் நன்கு அறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் நிதியுதவி என்று இவரிடம் சென்ற எந்த ஸ்தாபனமும் அவரது உதவிகளைப் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. அவர் இவர் தன் பிள்ளைகளுக்கும் தன் சுபாவத்தை ஊட்டி வளர்த்தமை மிகுந்த வியப்பிற்குரிய சாதனையாகும். சுழிபுரம் அப்புத்துரை விதானையார் பரந்துபட்ட இப்பெரும் உலகில் விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரில் ஒருவராக; முழுமையான மனிதராக விளங்குவது சுழிபுரத்திற்கு மட்டுமன்றி, எமது பாடசாலை முன்னைநாள் ஆசிரியர் என்றவகையில் எமது பாடசாலைக்கும் பெருமைதருவதாக உள்ளது. பிள்ளைகள் அவர் வழி நடப்பது அவர் மனதை நிறைத்திருக்கும்.

சி. சிவகணேசசுந்தரன்

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை, அதிபர்
சுழிபுரம்.

முருகன் அடியார்

28 ம் திகதி ஞாயிறு வீரகேசரியில் விதானையார் அவர்களின் மறைவு பற்றிய விளம்பரத்தைப் பார்த்தோம்.

அதிர்ச்சியுற்றோம்.

எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எமது கண்ணீர் அஞ்சலிகள் உரியதாகுக.

எங்கள் குடும்பத்திலே மிகவும் பாசமும் பரிவும் உள்ள முதிர்ந்த பெருமகன் மறைந்தது எங்கள் கிராமத்திற்குப் பேரிழப்பே.

இந்த வயதிலும் அவர் சூரனுடைய முன் கொம்பைப் பிடித்துக் கொண்டு ஓடுவது கண்முன்னே காட்சி தருகிறது.

அவ்வளவு திடமும் கடவுள் பக்தியும் கொண்ட முருகன் அடியான், என்றும் அவன் பாதங்களில் அழியாப் பெருவாழ்வு பெறுவார்.

அவரின் அன்புச் செல்வங்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியதாகுக.

15/5 Jawatta Garden, **திரு. திருமதி சி. விசுவலிங்கம்**
Colombo - 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைத் தடம்

மநுநீதி வல்ல முதலி வழித் தோன்றலில் பரம்பரைக் கிராமத் தலைமைகாரன் வழி வந்த சின்னையா அவர்கட்கும் வயிரமுத்து உடையார் வழிவந்த அமுதவல்லி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தவர் அமரர் விதானை அப்புத்துரை அவர்கள்.

பால்மணம் மாறா பச்சிளம் வயதில் அன்னையை இழந்தார். அதிஷ்டம் அரவணைத்தது. அன்னாரது மைத்துனரும், சங்கானை இராமலிங்க விதானை சுழிபுரம் மளவராயர் ஆகியோரின் பேரனும் மலாயா சுப்பிறீம் கோட் முதலியாருமான நமசிவாயம் மகாதேவன் தம்பதிகளுடன் மலாயா சென்று கல்வி கற்றார். கல்வி அறிவில் சிறந்து விளங்கிய அமரரை அக்காலத்தில் மலாயாவில் பெரும் உத்தியோகத்தில் அமர்த்தலாம் என உற்றார் உறவினர் எண்ணியிருந்தனர்.

அமரரோ அத்திட்டத்தை தவிடுபொடியாக்கி 'அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலுமே' சிறந்த தர்மம் எனக்கூறி மலாயா சுழிபுரம் சங்கத்தினர் சுழிபுரத்தில் அமைத்த ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். சிறந்த ஆசானாக விளங்கிய அமரரை சுழிபுரம் மக்கள் சங்கானை கிராம சபையின் சுழிபுரம் வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்தனர். ஆழுமையும் துடிப்பும் மிக்க இளைஞரான அமரரை மூளாய் வட்டார உறுப்பினரான மதிப்பிற்குரிய முகாந்தரம் மு. கிருஸ்ணர் J. P அவர்களும், தொல்புரம் வட்டார உறுப்பினருமான சட்டத்தரணி அ. கி. நவரத்தினம் Proctor S. C & N. P: அவர்களும் மேற்படி சபையின் உபதலைவராக தெரிவு செய்தனர்.

ஆசிரியப்பணி, அரசியற்பணி, சமூகப்பணி, ஆகிய பல துறைகளிலும் சிறந்து விளங்கிய அமரரது புகழ் நாடு பூராகவும் பரவியது. இவற்றையெல்லாம் கேள்வியுற்ற அமரரது மைத்துனரும், ஒன்று விட்ட சகோதரியும் மகாப்பாய் அதிகார் நாகநாதன் மகனும், கண்டி National Bank of India Limited பொறுப்பதிகாரியும், கண்டி மாநகர மேயருமான கேற் முதலியார் நா. கனகநாயகம் J. P. U. M அவர்களும் விடுமுறையைக் கழிக்க யாழ். நகர் வந்த வேளை அமரரைத் தம்முடன் அழைத்துச் சென்று தங்கள் பாங்கான Notional Bank of India Limited உதவிச் சிறாப்பராக அமர்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சக்கரம் சுழன்று ஓடியது. அமரரின் தந்தை கிராமத்தலை மைக்காரன் பதவியிலிருந்த வயது முதிர்ச்சியால் ஓய்வு பெற்றார். அமரர் அவர்கள் பாங் கிறாப்பர் வேலையை விட்டு வரமாட்டார் என பலரும் எதிர்பார்த்தனர். அதனால் கிராமத்தலைமைக்காரன் பத. விக்கு பல கோணத்தில் இருந்தும் பலர் களத்தில் குதித்தனர். உரிய நேரத்தில் அமரர் அவர்கள் உரிய முறைப்படி விண்ணப்பித்தார். சூரியனைக் கண்ட பனி போல் பலர் விலகினர். தேச வழமைச் சட்டப்படியும் தகுதி, தகைமை முதலிய அடிப்படையிலும் அமரர் அவர்கள் தெரிவானார்.

நுண்ணிய அறிவும், தண்ணிய பண்பும் பின்னிப்பிணைந்து உரு வான பெருமனிதனாக கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், இலட் சியம் தவறாத கடமை வீரனாக விளங்கினார். அல்வாய், கந்தளாய், அம்பாறை போன்ற தமிழ் பிரதேசங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பறிபோனதுபோல் அசோகன், சங்கமித்திரா, முதலியோர் முதல் இலங்கை வந்து இறங்கிய துறை என்ற போர்வை யில் வெள்ளரசமரத்தை நாட்டி திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை இந்துக்களின் புனித தீர்த்தமான திருவடிநிலையில் ஏற்படுத்தியதை தனது சாதுரியத்தால் முறியடித்தார். வெள்ளரச மரக்கன்று களையும் அதற்கு சுற்றிப்போடப்பட்ட பாதுகாப்பு அரணையும் இரவோடு இரவாக அப்புறப்படுத்தியோரை தனது சாதுரியமான சாட்சியத்தால் விடுதலை செய்வித்தது பெரும் சாதனையாகும்.

அமரர் அவர்கள் கிராமத்தலைமைக்காரனாக இருந்த காலத் தில் திருவடிநிலையை கிரிமலைபோல் ஆக்குவதற்கு பல முயற்சிகள் செய்து ஊக்குவித்தார். அன்றைய யாழ். மாவட்ட அரசாங்க அதிபரான திரு. ஸ்ரீகாந்தா C. C. S அவர்களை திருவடிநிலையயவில் வீடு அமைத்து குடியமரச்செய்தார். திரு. ஸ்ரீகந்தா C. C. S அவர்களை உதாரணம் காட்டி பலரையும் திருவடிநிலையில் குடி யேற ஊக்குவித்தார். இக்காலத்தில் திருவடிநிலையில் உருவாக்கப் பட்ட நெசவுசாலை, சீனித்தொழிற்சாலை, திருவடிநிலை வித்தியா சாலை முதலியவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு அயராது உழைத்த உத்தமர்.

உரிய காலத்தில் தனது அன்னை வழியான வயிரமுத்து உடை யார் பரம்பரையில் வந்த அப்பாப்பிள்ளை என அன்பாய் அழைக்கப் படும் அம்பலவாணர் கந்தையா தையல்முத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திலகவதி அம்மையாரை இல்லத்தரசியாகப் பெற்று மூன்று ஆண் செல்வங்களையும், மூன்று பெண் செல்வங்களையும் பெற்று, நிறை செல்வத்துடன் நிறைகுடமாக வாழ்ந்தாலும் தனது சிறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையான தொல்புரம் வழக்கம்பரை மகாமுத்துமாரியம்மன் ஸ்தாபகர் சரவணமுத்து முதலியார் வழிவந்த ஆறுமுகம் முத்து வேலு தம்பதிகளை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, தைப்பிறப்பு ஆகிய தினங்களில் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவது பெரும் பண்பான குணமாகும்.

நீண்டகாலமாக குடமுழுக்கு இல்லாது இருந்த பறாளாய் முருகன் ஆலயம், கம்பனை இராஜராஜேஸ்வரி ஆலயம் பற்றி பெரும் கவலை கொண்டிருந்தார். விதானை வேலையிலிருந்து ஓய்வுபெற்றதும் பெருமுயற்சி செய்து உரியவர்களுடன் ஒருங்கி ணைந்து பெரும் பங்குகொண்டு ஆலயங்களை புனரமைப்பு செய்து குடமுழுக்கை செய்வித்தது பெரும் பேறாகும்.

சதாசிவ உடையார் வழிவந்த குடும்பத்தினரால் வழங்கப்பட்ட நிலத்தில் பெருந்தர்ம வள்ளல் டாக்டர் P. S அப்பா என எல் லோராலும் அன்பாக அழைக்கப்படும் Dr. சி. சுப்பிரமணியம் மாகாண சத்திரசிகிச்சை நிபுணர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று பெருவிருட்சமாக விளங்கிய மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை அதிகாரசபை அங்கத்தவராகவும் பொருளாளராகவும் இருந்து சேவை ஆற்றினார்.

சிதம்பரம் அம்பலவாண சுவாமி தொல்புரம், மானா முதலி யார்மடம், சீரழிந்த நிலையில் இருப்பதுபற்றி விசனமுற்று இருந் தார். இதனுடன் தொடர்புடைய திரு. (சைவம்) சண்முகநாதன் அவர்களும் தொல்புரம், மூளாய், பொன்னாலை, நெல்லியான் இளைஞர்களும் எதிர்பாராத விதமாக மடாலய வளவில் உள்ள வைத்தியசாலைக்கு வருத்தத்திற்கு வைத்தியம் செய்ய வந்திருந்த அமரரைக் கண்டதும் நற்கருமம் செய்ய நல்லதோர் ஆசானைப் பெற்றோம் என மகிழ்ந்து அமரரை வருத்தி அழைத்து தலைவர் ஆக்கினார்.

பொன்னாலை முதல் பருத்தித்துறை வரை அராலி முதல் கிரிஓலை வரை மடத்திற்கு உரிய சொத்துக்களை அன்பு மார்க்க மாகவும் சட்டநடவடிக்கை மூலமும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த நீண்டகாலமாக நிர்வாகம் அணுகமுடியாதிருந்த நாவலர் வீதிக் காணியை நீதிமன்ற அனுமதிபெற்று விற்று தொல்புரம் மடாலயத்தை புனரமைப்புச் செய்து சிவலிங்கம் பிரதிஸ்டை செய்து மாதாந்த விசாகப்பூசையுடன் நால்வர் குருபூசை மகேஸ்வர பூசை புராண படனம் முதலியன செய்வித்து வந்தமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மடாலயத்திற்குச் சொந்தமான சிதம்பரத்தில் உள்ள மடாலயத்தின் ஒரு பகுதியை பராமரிப்புக்காரர் விற்பனை செய்ததை அறிந்ததும் உடன் அவரை சட்டமூலம் நிறுத்தி அண்ணாமலைப் பல்கலைக்கழக பல்துறைவேந்தர் ஆனந்த நடராஜா தீட்சகர் M. A., M. Lt. அவர்கட்கு அதிகார (Power of Attorney) வழங்கி விற்பனை செய்யப்பட்ட பகுதியை மீளப்பெற்று சிவபுரியில் உள்ள சொத்துக்களின் விபரங்களைப் பெற்றதுடன் இந்தியாவில் உள்ள எமது மடாலயத்தின் இலங்கை, யாழ்ப்பாணம், தொல்புரம், மானாமுதலியார்மடம் எனப்பெயர்ப் பலகையையும் பொறித்த தனிப் பெருமை அமரரையே சாரும். நீராட்டி, உணவூட்டி, தாலாட்டி, பராமரித்த அன்பு மகள் மலரிடம் அமரராகும் வேளையில் ''அதிகாரப்பாவும், P. S. அப்பாவும் வந்திருக்கிறார்கள். சைவத்தாரை (சண்முகநாதன்) மடத்தை வடிவாய்ப்பார்க்கச் சொல்லு'' எனக்கூறி அமரரானதை கேள்வியுற்று எமக்கு மெய் சிலிர்த்தது. தன்னலம் அற்று சேவை ஆற்றிய அமரரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சிதம்பர அம்பலவாண சுவாமியை இறைஞ்சுகிறேன்.

சண். கந்தையா
செயலாளர்

சிதம்பரம் அம்பலவாணசுவாமி
தொல்புரம், மானா முதலியார்மடம்,
சுழிபுரம்.

கூத்தாட்டு அவைக்குழாந் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

— திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறாளை முருகனுனைப் பரிந்துமே அழைத்தானோ!

அன்பின் திருவுருவே அழகொழுகும் ஆண்டகையே!
பண்பின் இருப்பிடமே பார்விட்டுப் போனதென்ன?
ஆயிரம் பிறைகண்டு அவனிதனில் வாழ்ந்தவரே!
அன்பர்தம் உள்ளமதில் ஆல்விழுதாய்ப் பதிந்தவரே
பறாளை முருகனையே பன்னிநிதம் பணிந்தவரே
பரிபாலன சபையினது பதியாய் மிளிர்ந்தவரே
அபிவிருத்திச் சபைதனிலே அயராது உழைத்தவனே
அறுமுகன் புதுத்தேர்க்கு அரும்பாடு பட்டவனே
கம்பனை அம்மனது காரியப் பணிக்கெல்லாம்
கவர்ச்சிமிகு தலைவனாய்ச் சலியாது செயல்புரிந்தீர்!
வழக்கம்பரை யம்பாளின் வழிவழியே வந்தவனே
வழிதவறிப் போகாமல் வனப்புடன் வாழ்ந்தவனே
மானாமுத லியார்தம் மடத்தன்னின் மாதலைவ!
மாசேவை பலபுரிந்த மாபெரும் வீரனையா!
சுழிபுரம் கிராமத்தின் முன்னேற்றச் சங்கத்தை
துரிதமாய் வளர்த்தெடுத்த தூயவனே! எங்குற்றாய்?
பறாளை முருகனுனைப் பரிந்துமே யழைத்தானோ!
பார்க்கா திங்குயாம் பதைபதைத்துத் துடிக்கின்றோம்
பன்னிருகை வேலவனாம் பறாளை முருகனவன்
பாதமது சேர்ந்தீரோ! பரமபதம் பெற்றீரோ!
விதானையா ரில்லாமல் விம்மிநிதம் யாமழவே
விண்ணுலகம் சென்றீரோ! விபரம் தெரியவில்லை!

கொழும்பு - 06

டாக்டர் க. சிவராஜா

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு"

— திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பணிக்கு துணையானவர்

சுழிபுரம் முழுமைக்கும் ஓர் அரச அதிகாரியாக விளங்கி வாழ்ந்தவர் அமரர் திரு. சி. அப்புத்துரை விதானையார். இவரது ஆளுமையை நான் பல்வேறு நிகழ்வுகளில் கண்டு நேரடியாகப் பாராட்டியவன்.

எடுப்பான தோற்றமும், கையில் பிரம்பும், யாவரையும் கட்டி அணைக்கும் அன்பு உள்ளமும், எடுத்த கருமத்தை திறம்பட நடாத்தும் திறமையும் உடையவராக விளங்கியவர் இவர்.

விதானையாராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற காலத்தில் பல்வேறு பொதுப் பணிகளைச் செய்து வந்தார். குறிப்பாக பறாளை முருகன் ஆலயம், சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயம் ஆகியன திறம்பட இயங்க அரும்பாடுபட்டார்.

பறாளை முருகன் இலட்சார்ச்சனை வைபவத்தை என்றும் நினைவு கொள்ளும் வகையில் நாம் கந்தரநுபூதி மனனப் போட்டியை நடாத்தி பரிசுகள் வழங்கி வருகிறோம்.

இதற்கு எமக்கு பக்கபலமாக இருந்து எம்பணிக்கு ஓர் ஊன்று கோலாக விளங்கியவர் அமரர் அவர்கள். இவரை நாம் என்றும் மறக்காது பாராட்டுகின்றோம்.

முருகனின் வருடாந்த சங்காபிஷேகம் நடைபெறும் நாள்களில் தொண்டர்களுடன் தாமும் ஓர் தொண்டராக தொண்டு செய்து வழிபாடு நடாத்தி யாவருக்கும் ஒரு முன் மாதிரியானவராக திகழ்ந்ததை நாம் என்றும் மனதிற்கொள்வோம். இவரது வழிநடத்தலும் ஒழுங்கும் எம்மவர்க்கு முன்மாதிரியான ஒன்றாகும்.

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையின் சிறப்பை பலருக்கு கூறி எம்மை ஊக்குவித்த பெருமை விதானையாரைச் சாரும்.

இன்று எம்மத்தியில் விதானையார் இல்லாது இருந்தாலும் தந்தையின் பணிகளைத் திறம்படத் தொடர்ந்து நடத்த இவரது மைந்தர்கள் இருக்கிறார்கள் என்று ஆறுதல் கொள்வோம்.

பிறந்தவர் ஒருநாள் இறப்பது உண்மை. இதைத் தெரிந்து நாம் விதானையார் பணியை மனங்கொண்டு அவ்வாறு நாமும் செய்து அமரர் சி. அ. விதானையார் நினைவை நினைவு கொள்வோம்.

''இன்பமே சூழ்க'' ஓம் சாந்தி.

க. வாமதேவன் J.P

பண்ணாகம்,
சுழிபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை செய்து காப்பாற்றும் முன்னவன்

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற புண்ணிய பூமி சுழிபுரம். ஐவகை நிலங்களுள் நால்வகை நிலங்களின் தன்மையையும் பண்பையும் தன்னகத்தே அடக்கிய பெருமையும் இக்கிராமத்திற்கு உண்டு.

இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்னணியும் சுழிபுரத்திற்கு உண்டு.

அசோக மன்னனின் தங்கை சங்கமித்திரை சமய - சமாதானத் தூதுவராக அடியெடுத்து வைத்ததும் இக்கிராமத்தின் கரையிலே யேயாகும்.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் பாட்டுடைத் தலைவி கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபடும் அரிய பண்பும் இக்கிராமத்தின் கண் சிறந்து விளங்குகின்றது.

பண்டைய சமயங்களின் - சமரசம் காணப்படும் - கலாசார விழுமியம் இங்கு தலையாயதாகத் திகழ்கின்றது.

அறுபத்து மூவருக்கும் மடம் அமைத்து வழிபடும் மாண்பும் ஈண்டு பெருமைப்படக் கூடியதே.

ஒன்றரை நூற்றாண்டு கால தொடர்ச்சியான கல்விப் பாரம்பரியமிக்க கலாசாலைகள் தலைநிமிர்ந்து காணப்படுகின்றன.

குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை நிலப் பண்புகளைக் கொண்டு மிளிரும் இப்பெரிய கிராமத்தின் குறிச்சிகள் சுட்டும் பெயர்கள் நயமும் இலக்கியப் பண்பும் மிக்கனவாகும்.

இத்தனை சிறப்புமிக்க கிராமத்தில் பெருமை மிக்க மனிதர்களைக் கொண்ட புகழ்மிக்க குடும்பங்களும் உண்டு.

அத்தகைய பெருமைமிக்க ஒரு குடும்பத்தில் 1910 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் ஏழாம் நாள் பிறந்தவர் அமரர் சின்னையா அப்புத்துரை அவர்கள். அமரர் அவர்களின் ஆரம்பக் கல்வி பிறந்த கத்திலும் இடைநிலைக் கல்வி மலேசியாவிலும் இறுதி நிலைக் கல்வி மீண்டும் சுழிபுரத்திலும் சித்தித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலாலம்பூர், Prince of Wales கல்லூரியில் கற்று இவர் தனது Junior Cambridge Examination பரீட்சையில் 1930 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சித்தியடைந்தார். இச்செய்தியினை அவரது சுய விபரக்கோவையில் இருந்து பெறக்கூடியதாக உள்ளது.

1931 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 24 ம் நாள் Prince of Wales கல்லூரி அதிபர் Mr. B. K. Pillai M. A; B. L. அவர்கள் அமரர் சி. அப்புத்துரை அவர்களுக்கு வழங்கிய நற்சாட்சிப்பத்திரம் இச் செய்தியினை ஆவணப்படுத்தியுள்ளது.

கேம்பிறிஜ் யூனியர் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் ஊர் திரும்பிய அமரர் அவர்கள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்துள்ளார்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபராக கலாநிதி K. சிவப்பிரகாசம் M. Sc, Ph. D. (Lon) அவர்கள் கடமைபுரிந்த காலத்தில் அமரருக்கு நற்சான்றிதழ் வளங்கியுள்ளார். இச்சான்றிதழி 1935, யூலை 17ம் திகதியிடப்பட்டுள்ளது. இச்சான்றிதழில் ஓர் இடத்தில் ''He is a healthy young man with strong physique fit for any arduous work'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. (Arduous என்பது இங்கு 'உயர்ந்த' என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது).

அமரர் அவர்கள் தனது முப்பத்தைந்து அகவையைப் பூர்த்தி செய்வதற்குள் மூன்று வகையான உயர் தொழில்களை (Noble Profession) வகித்துள்ளார். ஆரம்பத்தில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகச் சிலகாலம் கல்விப்பணி புரிந்துள்ளார். பின்னர் கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கோட்பாட்டைத் தாரக மந்திரமாகக் கொண்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் அதிகாரியாகப் பணியாற்றினார். பின்னர் இந்திய வங்கி (National Bank of India Ltd.) கண்டிக் கிளையில் உதவிச் சிறாப்பராக (Assistant Shroff) பணிபுரிந்துள்ளார். இன்றைய வங்கிக் கட்டமைப்பிற்கும் (Structure) அன்றைய வங்கிக் கட்டமைப்பிற்கும் இடையில் நிறைய வேறுபாடு உண்டு. அந்நாளில் பிரதிநிதி (Agent) என்ற பதவி இன்றைய முகாமையாளரையும் சிறாப் (Shroff) என்ற பதவி உதவி முகாமையாளரையும் குறிப்பதாகவும் அமைந்துள்ளது. இந்த வகையில் அமரர் அவர்கள் உதவி முகாமையாளருக்கு உதவியாகப் பணியாற்றியுள்ளார் என்பது இங்கு புலனாகின்றது.

யாழ்ப்பாணத்தின் அதிமூத்த மனிதர் (Great Old Man of Jaffna) என அழைக்கப்பட்டவரும் 105 வயது வரை வாழ்ந்தவருமான அதிகார் A. நாகநாதர் (Adigar A. Naganathan J.P &

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

U.P.M) அவர்கள் 1946 மார்ச் 16ம் திகதி வழங்கிய நற்சான்றிதழில் இருந்து இத்தகவலைப் பெறக்கூடியதாக உள்ளது.

அமரர் அப்புத்துரை அவர்கள் குடாநாட்டில் பரவலாக செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார் என்பதற்கு அவரது சுயவிபரக் கோவையில் உள்ள மேலும் ஒரு ஆவணம் சான்று பகருகின்றது. மரபுவழிச் சைவச் சூழலில் பிறந்து வாழ்ந்த அமரர் அவர்களை யாழ் ஆயர் இல்லமும் 54 ஆண்டுகளுக்கு முன் பாராட்டியுள்ளது. 1946 மார்ச் 25 ஆம் நாள் ஆயர் இல்ல அதிகாரி (Administrator) வழங்கிய கடிதத்தில்,

"He is much respected by his people, partly on account of the good name of his father and partly on account of the interest he has shown in the welfare of thouse round him, என்று குறிப்பிட்டுள்ளது இங்கு ஈண்டு நோக்கற்பாலது.

அமரர் தனது முப்பத்தாறாம் அகவையில் ஏழு பரம்பரையாக அவரது குடும்பம் வகித்து வந்த கிராமத் தலைமைக்காரன் (விதானை) பதவியைப் பொறுப்பேற்றார்.

அரச கட்டமைப்பில் கிராமத் தலைமைக்காரன் பதவி கிராம சேவையாளராக மாற்றமடையும் வரை அமரர் இப்பதவியை வகித்து வந்தார்.

1967 ஆம் ஆண்டு அமரர் அவர்கள் கிராமத் தலைமைக்காரன் சேவையில் இருந்து இளைப்பாறிய காலை சுழிபுரம் ஸ்ரீ கணேச சன சமூக நிலையத்தினர் சேவை நலம் பாராட்டு விழா ஒன்றினை நடாத்தினார்கள்.

அவ்விழாவில் கார்த்திகேசு அரிச்சந்திரா அவர்கள் யாத்து வாசித்த கவிதையில் பின்வருமாறு,

தூயவனாய் வாழ்ந்து துரிதமாய் வேலைசெய்து
நேயமுடன் எம்மையெலாம் நித்தம் அணைத்தாய்
காயவருத்தம் கண்டாலும் கடுகளவும் கலங்காது
மாயவன்போல் மண்ணுலகில் மகிழ்ந்து வாழ்ந்தாயே

என வர்ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது பதவிக்காலம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என இன்றும் ஊரவர்களால் சிலாகிக்கப்படுகின்றது. அமரரின் கிராமத் தலைமைக்காரன் பணிபற்றி தொண்டர் கந்தசாமி அவர்கள் தமது இரங்கற் செய்தியில் இரத்தினச் சுருக்கமாக விபரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இரங்கற் செய்திகள் அவரது கொடை, கல்விப்பணி, சமயப்பணி ஆகியவற்றை விலாவாரியாக விபரித்து நிற்கின்றன.

அமரரின் இறுதி ஊர்வலம் நடைபெற்ற 28-01-2001 அன்று பிரசுரமான சில அஞ்சலிப் பிரசுரங்களிலிருந்து:

கிராம சேவையினை கண்ணியமாய் பழி
கிட்டவும் நெருங்காமல் கிரமமாய் செய்தவரே
ஊருக்காய் உழைத்தாயே உத்தமனாய் வாழ்ந்தாயே
யாருக்கு மஞ்சாமல் கடமையினைச் செய்தவரே!

உன்மகன் போல் எம் மகனுமில்லை யையா
அன்பிலே சுரங்கமாய் ஆற்றலிலே சிங்கமாய்
பண்பிலே சிகரமாய் பார்வையிலே தெய்வமாய்
கண்ணியமாய் நாம் பெற என்ன தவம் செய்துவிட்டாய்?

தெல்லியடி
கரவெட்டி

அம்சன் ஒளியக
நண்பர்கள்

● ● ●

எமது இனிய நண்பரும், அணிஞ்சிலடி (கரவெட்டி)
பொழுதுபோக்குக் கழகத்தின் நீண்டநாள் அங்கத்தவரும்,
வடமராட்சி கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகருமாகிய

திரு. அ. கிருபானந்தமனுநீதி

அவர்களின் பாசமிகு தந்தையாரும்
சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தைப்
பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய

சின்னையா அப்புத்துரை

அவர்கள் 25-01-2001 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், உற்றார் உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் மன்றாடுகின்றோம்.

அணிஞ்சிலடி நண்பர்கள்
கரவெட்டி.

● ● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூறு வயதிலும்
துடிப்பாட்டமாய் முன்னின்று
பலவேலை முடித்தாய்!
ஊருக்காய் பல தொண்டு செய்த உத்தமரே
உன் பெயர் பாரில்
நின்று நிலவும்!
சமூக முன்னேற்றத்திற்காய்
சனசமூக நிலையம் அமைக்க
அள்ளிக் கொடுத்த கை
அடங்கியதோ
ஐயா! உன் பெயர் ஊரில்
நின்று நிலவும்! இது நிஜம்

சுழிபுரம் பறாளாய் நாவலர் சனசமூக நிலையம்
பறாளாய் விளையாட்டுக் கழகம்.

● ● ●

புதிய கல்வித் திட்டக் கோட்பாடுகளைச் சிறாருக்கு பெற்றுத்தர
''சிறுவர் பூங்கா'' தன்னை சுழி/ஐக்கிய சங்கத்தில் அமைத்துத்
தந்தவர்

''ஊஞ்சலும் ஏணியும் ஏந்திடும் ஏனைய நல்லமைப்புகளுடன்
நிலைத்து நின்ற பூங்காவில் குழந்தைகளின் மகிழ்ச்சியொலி.

கல்வி உதவிக்கென வந்தோருக்கும் இரு கரம் நீட்டி நிற்கும்
உம் பார்வையில் அன்பிருக்கும், பேச்சில் கனிவிருக்கும்
அன்பும் அருளும் கூடவே கலந்திருக்கும், கலகலப்புமிருக்கும்
மறுப்பற்ற தலையசைப்பும், புன் சிரிப்பிலும் அழகிருக்கும்.

இனிக் கல்விப்பணி செய்ய யாரைக் கேட்டுநிற்போம்
எவர் முகம் பார்த்து நிற்போம், வரையாது வழங்கிய கைகளை
நினைப்போமோ
நம்பிக்கை தரும் உம் இன் சொல்லை நினைத்து நிற்போமோ
நினைவுகளில் நிலைத்து மறைந்தவரே உமக்கு எம் கண்ணீர்
அஞ்சலிகள்!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்,

யா/ சுழிபுரம்,
ஐக்கிய சங்க வித்தியாசாலை.

● ● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரி மூத்த பழைய மாணவரும், இளைப்பாறிய சுழிபுரம் விதானையாருமாகிய திரு. சின்னையா அப்புத்துரை அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயர்பகிர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா அலுவலர்கள்.

● ● ●

சுழிபுரம் பறாளையில் கந்தரநுபூதி மனனப் போட்டியை நாம் வருடா வருடம் நடத்த எமக்குப் பெருந்துணையாக வாழ்ந்த இப் பெரியார் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அமரரின் ஆத்மா முருகப்பெருமான் பாதாரத்தை சென்றடைய நாம் பிரார்த்திப்போமாக அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி

சுழிபுரம்,

பஜனைச் சபையார்
சங்காபிசேக சபையார்

● ● ●

ஆலயம் திறந்து ஆண்டவனை
பேதமின்றித் தொழ
பெரு வழி செய்த பெருமகனிவன்
இந்து இளைஞரின்
சிந்தை கவர்ந்து சீரிய தலைவனாய்
ஆலய சபைகளின் அறங்காவலனாய்
வாழ் நாள் முடித்த வள்ளலே
முதிய இளைஞனாய் முன்னின்று
எடுத்த பணி முடித்தாய்!
ஐயா உன் வழியில்
எம் பணி தொடரும்

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மாள்
ஆலய தர்மகர்த்தா சபை
இந்து இளைஞர் மன்றம்

● ● ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா அப்புத்துரை அவர்கள் ஷி ஆலய திருப் பணிச்சபை நிர்வாக அங்கத்தவராகவும், தர்மகர்த்தாசபைத் தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றி ஆலய வளர்ச்சிக்கு முன்னின்று செயற்பட்ட பெருமைக்குரியவராக வாழ்ந்த பெருமக னாவார்.

சுழிபுரம் கிராமத்தில் பல்வேறு, சமூக, சமய நிறுவனங்களின் தலைவராகவும், போஷகராகவும், இருந்து மக்கள் சேவையே மகேசன்சேவையாகக் கருதி வாழ்ந்த பெருமைக்குரியவராவர். அன்னார் **25-01-2001** வியாழக்கிழமை இரவு பறாளாய் விநாயகர் முருகன் திருப்பாதங்களை அடைந்து விட்டார்கள். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் அவர்களது குடும்பத் தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

பறாளாய்,
சுழிபுரம்.

தர்மகர்த்தா சபை
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

அக்காலம் தொடக்கம் அவருடைய இறுதிக்காலம்வரை குறித்த தர்மத்தின் முன்னேற்றத்துக்கும் பாதுகாப்பிற்காகவும் பரிபாலன சபையின் ஆதரவுடன் மிகவும் கரிசனையுடன் செயலாற்றி வந்தார். அன்னாருடைய சேவைக்காலத்தில் தொல்புரம் மடாலயத்தை புதுப் பித்துக் கட்டியதுடன் அராலிக்கிராமத்தில் அமைந்துள்ள கிளை மடாலயத்தையும் புதுப்பித்துக் கட்டி அந்தமடாலயத்திலும் 1981 ம் ஆண்டில் மண்டபம் கட்டுவித்து சிவலிங்கம் பிரதிஷ்டை செய்வித்து அக்காலம் தொட்க்கம் அந்த மடாலயத்தில் பங்குனி உத்தரதின அபி ஷேகம், பூஜைகளும் நால்வர் குருபூஜைகளும் நாளாந்த பூஜைகளும் திருவெம்பாவைப் பூஜைகளையும் அந்தக் கிராமத்தில் உள்ள மடா லயத்தின் காணிகளின் வருவாய்களைப் பெற்றுச் சிறப்புடன் செய் வதற்குரிய ஒழுங்குகளைச் செய்வித்தார். அத்துடன் இந்த மடாலயத் தின் முன்னோரால் வகுக்கப்பட்ட பிரதான நோக்கங்களில் ஒன்றான ஏழைமக்களின் வைத்திய உதவியென்பதற்கு வசதியாகக் கட்டிடம் அமைப்பதற்கு ஒழுங்குசெய்வதற்கு பொதுமக்களின் வேண்டுகோளின் பிரகாரம் தொல்புரம் மடாலயவளவில் இரண்டு ஏக்கர் காணியைக் குறித்த பரிபாலன சபையில் தீர்மானம் செய்து அரசாங்கத்திடம் நன்கொடையாகக் கொடுத்து அரசினர் வைத்திய நிலையம் செயல் பட ஒழுங்குகளைச் செய்வித்தார். இந்த மடாலயத்தின் சொத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக அயற்கிராமங்களாகிய வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளிலும் ஆனைக்கோட்டைப் பகுதி பொன்னாலை மூளாய் ஆகிய கிராமங்களிலும் காணிகள் இருக்கின்றன. இதில் அராலிக் கிராமத்தில் உள்ள பொது நூல்நிலையம் மாதர்முன்னேற்றச் சங்கம் என்பன அமைப்பதற்கும் பொன்னாலை கிராமத்தில் சிறுவர் பாட சாலை நடைபெறவும் கட்டிடம் கட்டுவித்து பலவித தர்மப்பணிக ளைச் செய்வதற்குரிய ஒழுங்குகளை பரிபாலன சபையின் தீர்மானத் துடன் நிறைவேற்றியுள்ளார். அண்மையில் இந்தத் தருமம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றதாலும் தான் வயோதிபம் அடைந்து விட்டகாரணத்தாலும் 02-12-2000 திகதியில் சபையின் பொதுக்கூட்டத்தைக் கூட்டி அன்றைய தினம் ஓர் பரிபாலன சபையை நியமித்து அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்த பின்பு மனம் நிம்மதி பெற்றுள்ளார்.

சிதர்பர அப்பலவாணசுவாமி
மானாமுதலியார் மடம் தர்மகர்த்தாசபை

தொல்புரம், சுழிபுரம்.

● ● ●

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்''

எச்சம் என்பது நன்மக்களைக் குறிப்பதாக ஒருவகைச் சிந்தனைக் கோட்பாடு உண்டு.

இக்கோட்பாட்டுக்கு மாறுபட்ட முறையில் ''எச்சம்'' அவரவர் வாழ்நாளில் செய்த பணிகளைச் சுட்டுவதாகவும் பிறிதொரு வகைச் சிந்தனைக் கோட்பாடு உண்டு.

எந்த சிந்தனைக் கோட்பாட்டை (School of Thought) ஏற்றுக் கொண்டாலும் அமரர் விதானையார் சி. அப்புத்துரை அவர்கள் மக்களால் தக்காராகவே என்றும் இனம் காணப்பட்டார்.

க. சீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

அன்று பெரியார் சி. அப்புத்துரை அவர்களுக்கு நிலையக்குரல் பாராட்டு மலர் அச்சிடமுனைந்தது. சித்திக்கவில்லை.

இன்று நிலையக்குரல், அமரர் சி. அப்புத்துரை அவர்களுக்கு அஞ்சலிமலர் அச்சிட்டுள்ளது.

இது தான் இறைவன் திருவுளம் போலும்.

இம் மலர் சிறப்புற அமைய உதவியவர்கள் பலர்.

அனைவருக்கும் நன்றி.

அமரரின் அந்தியேட்டி நாளில் இம்மலரினை வெளியிட அநுமதி தந்த அமரர் குடும்பத்தினருக்கும் நன்றி.

நிலையக்குரல்
வழக்கம்பரை,
சுழிபுரம்.
24-02-2001

ஆசிரியர்

பாரதி பதிப்பகம், 430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org